# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## GEOS 4103 இலங்கைப் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

இலங்கை புறவரிப்படம் வழங்கப்படும்.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

---

### பகுதி – I

01.(அ) இலங்கை புறவரிப்படத்தில் இலங்கையின் பிரதான ஆறரித்த சமவெளிகளை வரைந்து காட்டுக.

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் தரைத்தோற்ற உருவாக்க செயன் முறைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) இலங்கையின் தரைத்தோற்ற உருவாக்கம் தொடர்பில் பேராசிரியர் க.குலரெத்தினம் அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் எவ்வளவுதூரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது என்பதனை தகுந்த ஆதாரங்களின் துணை கொண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

02.(அ) இலங்கையின் கல்லியல் அமைப்பினை பாகுபடுத்துக.

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் வேறுபட்ட தரைத்தோற்றங்களின் உருவாக்கத்திற்கு காரணமான அதன் புவிச்சரிதவியல் பின்னணியை தகட்டோட்டத்துடன் தொடர்படுத்த முடியுமா என்பதனை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) “இலங்கை இந்திய துணைக்கண்டத்தின் ஓட்டிணைவான பகுதியாகும்.” இக்கூற்றினை ஆராய்க.

(12 புள்ளிகள்)

03.(அ) இலங்கையின் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சிப் பாங்குகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி ஆராய்க. (10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் ஆண்டு மற்றும் பருவகால மழைவீழ்ச்சிப் பரம்பல் பாங்குகள் பற்றி ஆராய்க. (15 புள்ளிகள்)

## பகுதி – II

04. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட "திறந்த பொருளாதாரக் கொள்கை" நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதனை நுணுகி ஆராய்க. (25 புள்ளிகள்)

05. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 'நிலச்சீர்திருத்த நடவடிக்ககை' நாட்டின் உழவர் விவசாயத்துறையைப் பொறுத்தவரையில் எதிர்பார்த்த இலக்கை எட்டத்தவறிவிட்டது என்ற கருத்தின் உண்மைத் தன்மையை தகுந்த உதாரணங்கள், ஆதாரங்கள் தந்து விளக்குக. (25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை தருக.

(1) இலங்கையில் வறுமை ஒழிப்புத்திட்டங்கள்

(2) இலங்கையின் இயற்கைத்தாவரம்

(3)இலங்கையின் அமைவிடமும் அதன் புவிசார் அரசியல் முக்கியத்துவமும்